# IN THE COURT OF ADDITIONAL CHIEF JUDICIAL MAGISTRATE, KUMBAKONAM

| | | |
|---|---|---|
| **MCOP No. 80/2021** | **நாள் – 09.01.2026** | **சாட்சி – எ.ம.சா.1** |

*Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Act 44 of 1969).*

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு.தங்கராஜ் | தந்தை பெயர் | திரு.கைலாசம் |
| ஊர் | கும்பகோணம் | தாலுக்கா | கும்பகோணம் |
| தொழில் | இளநிலை உதவியாளர், வட்டார போக்குவரத்து அலுவலகம், கும்பகோணம் | வயது | 55 |

**<u>முதல் விசாரணை:</u>**

நான் வட்டார போக்குவரத்து கழகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து அனுப்பப்பட்ட சாட்சி அழைப்பாணையை பெற்று சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி 1 ஆக சாட்சியம் அளிக்கிறேன்.

1. வட்டார போக்குவரத்து அலுவலர் சாட்சியம் அளிக்க எனக்கு வழங்கிய அனுமதிக் கடிதம் **சா.சா.ஆ.1.**

2. மோட்டார் வாகன ஆய்வாளர் வழங்கிய TN 82 A 4912 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர மோட்டார் வாகனத்திற்கான மோட்டார் வாகன ஆய்வறிக்கை **சா.சா.ஆ.2**.

மேற்கண்ட மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் இருசக்கர வாகனத்தின் உரிமையாளர் R.ராஜேஸ்வரி த/பெ. ராமையன் என்றும், அதன் ஓட்டுநர் K. அறிவழகன் த/பெ. காளிமுத்து என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. விபத்து சமயத்தில் TN 82 A 4912 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்திற்கு விபத்து சமயத்தில் காப்பீடு பாலிசி இல்லை என்றும் சா.சா.ஆ.2 ல் காலம் 10 ல்

குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், அதற்காக ரூபாய்.1000/- அபராதம் செலுத்தப்பட்டுள்ளது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**<u>மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u> :-**

மேற்கண்ட மோட்டார் வாகன விபத்தில் ஈடுபட்ட நான்கு சக்கர மோட்டார் வாகனத்தின் பதிவெண் என்னவென்றால் TN 68 Q 7471 ஆகும். மேற்கண்ட நான்கு சக்கர வாகனத்தை ஓட்டியவருக்கு ஓட்டுநர் உரிமமும், வாகனத்திற்கு காப்பீடு பாலிசி விபத்து சமயத்தில் அமலில் இருந்தது என்றால் சரிதான்.

Typed to my dictation in open Court, read over to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

G. MANIKANDARAJA

Digitally signed by G. MANIKANDARAJA
Date: 2026.01.09 05:37:02 +0530

Additional Chief Judicial Magistrate,
Kumbakonam.